

Vol.26 | No. 2 | February 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



WORKSHOP ON SYNODALITY 04.01.2022

TENKASI MISSION Recollection for Catechism Teachers 26.01.2022

TENKASI MISSION Seminar for Catechism Students 26.01.2022

KKSSS, Psycho Social Training 31.01.2022




Skill Training Centre, Inauguration
Manjalumoodu, 05.01.2022



FCC Convent Blessing, Theni - 22.01.2022



Diamond Jubilee, St. Joseph's Church, Soosaipuram - 06.01.2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 NO :2 FEBRUARY 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் சுற்றுமடல் | 08 |
| ஆயர் சுற்றுமடல் | 12 |
| மறைக்கல்வி | 17 |
| குழந்தை ஈசோ | 22 |
| மிஷன் லீக் | 24 |
| இளையோர் இயக்கம் | 28 |
| இல்வாழ்வு இயக்கம் | 29 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 31 |
| KKSSS | 33 |
| மறைமாவட்ட செய்திகள் | 35 |
| மறைவட்ட செய்திகள் | 42 |
| Bishop's Engagements | 47 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/130/2022**

**31 January 2022**

**Dear Readers,**

In this circular, I want to reflect with you on the theme of leadership that every priest is called upon to exercise in his pastoral ministry. Priests are called to be the shepherds of the people entrusted to their pastoral care. They are to be leaders of the Christian community. Hence in his ministry, a priest has to combine the roles of a pastor and a leader. His leadership is not power; it does not dominate or control the people. Jesus has very clearly defined the nature of the pastoral leadership when he said: "You know that the rulers of the gentiles lord it over them, and their great men exercise authority over them. It shall not be so among you; but whoever would be great among you, must be your servant… even as the Son of Man came not to be served but to serve and give his life as a ransom for many" (Mk 10: 42-45).

We need to understand what leadership is and who a leader is before we can speak of pastoral leadership. Leadership is often defined as the capacity and the will to rally people to a common purpose and the character which inspires confidence. Hence, a leader is someone who touches another's future. Kurt Lewin, a specialist in management psychology, describes leadership as developing a vision, an effective team and the potentialities of each person in the group. This description of leadership seems to be very much relevant in pastoral ministry. When a priest is

entrusted with a work, he should have a clear vision about what he is going to do. At the beginning of his ministry, he should clearly define his vision, goals and priorities. For example, think about a priest who is appointed to a small rural parish where most of the people are uneducated and the unemployment is very high. Here his vision is to develop a community of people who are not educated and not employed. To fulfil this vision, he should have some specific goals, for example starting schools and small business opportunities. But the vision of a priest appointed to a city parish will be completely different.

After setting the goals, the priest should define priorities. He should not try to do everything at once. Decide what the most important thing is and then start with it. When we take up so many things together, we will not be able to concentrate on anything. Though a clear vision about ministry is important priests should not impose this on others. A common vision has to be evolved through dialogue with the members of the parish or organization. A leader with a proper vision looks to the future of his organization. He thinks ahead of time. He is not merely an administrator, who is concerned about the day-to-day management of his organization. Often priests are concerned about the administration of the parish. To be effective in the ministry, priests should have a proper vision about what they plan to do.

Good leadership consists in developing an effective team. According to Kurt Lewin, an effective leader is one who finds out the most competent people to work with him and uses their talents for achieving the goals. Some leaders have an ‘Ego’ problem. They do not want to admit that they cannot handle a situation or they want others to see how capable they really are. So, they try to do everything by themselves. Very often priests

in their ministry become wrapped up in details that other people should handle. This diminishes the effectiveness of their own lives and responsibilities.

In the Old Testament, we see Moses trying to do so many things by himself. Since he was getting involved in many things, he could not pay attention to important things. Finally, Jethro, his father-in-law, told him that he was wearing himself out by trying to handle everything by himself. The people were also weary of the style of Moses. Whenever a priest tries to do everything by himself in his ministry, his co-workers and parishioners will feel frustrated.

Pastoral leaders must always share their work, even if others do it less well than they do or in a different way. It is always easier to do things ourselves than to teach others to do them. Priests who fall into the trap of wanting to do everything themselves are in danger of becoming isolated.

Pastoral leader is a shepherd whose primary duty is to care his flock. Often a leader or an administrator is by nature more goal-oriented than most people. The leader seeks to accomplish things and achieve as much as possible. Frequently, this causes the leader to appear and may become, insensitive to people. Often the leader feels pressured by the multitude of his responsibilities and simply does not have time to spend with people with whom he works. It often becomes a matter of priorities. To a secular leader, the task to be achieved becomes more important than any one individual's needs or problems. But it is dangerous for a pastoral leader when people are ignored or neglected.

Jesus had time for people, the individual as well as the crowd. Pastors must arrange their priorities so that time spent with people is not looked upon as time wasted or time that is not

important. They should develop a caring attitude by showing that people are more important to them that the tasks or the projects that need to be done. Love and loyalty are very much closely related. The more the love demonstrated between the leader and the people he leads, the stronger the ties and loyalties.

Learning to love people is essential to pastoral leadership. Pastors should learn to show love to everyone and at all times. A loving leader can be counted as in all times of difficulty and trial. A leader can destroy his effectiveness if he cannot be trusted. He must never betray confidences. Things that are shared with him should always remain confidential.

Remember that a priest is not an autocrat. On the contrary he should be a man of dialogue. Pastors, who lack the capacity to listen, end up as dictators. We have to admit that our traditional form of leadership in the Church has always been based on a monarchical style. However, it is the responsibility of the contemporary pastoral leaders to outgrow this kind of leadership because it is definitely unchristian.

Let us remember how Jesus took time to listen to Nicodemus, to Zacchaeus, to the woman of Samaria and the woman caught in adultery. Though a pastor may not be able to solve all the problems of his people, he can show his compassion through listening. Sensitive listening means the ability to empathize with the person with the conscious desire to understand the message and implement it in an appropriate manner. In counselling to empathize is to “put oneself in the other’s shoes”. The sensitive pastoral leader is able to accept new ideas and opposing opinions without being threatened.

Pastors cannot lead effectively without communicating with people. You cannot isolate yourselves from the people you are to lead. For an effective ministry priests should develop a sense

of belonging among the people. Each person should feel that he is important. Allow your people freedom to express ideas and opinions. You cannot really do this if you rebuke them or reflect attitudes of superiority over them. Learn to admit your mistakes and apologize sincerely when things go wrong or do not turn out the way you expected. Never blame the people for your failure. Be careful about manifesting a critical spirit of one individual's ideas or opinion without first hearing his side. It sees that there are three sides to every issue: your view, the other person's view and the real truth. A critical spirit can cut off communication.

In pastoral leadership, motivation is vital. Often people criticize priests because they suspect wrong motivation behind the decision taken by them. Certain wrong motivations can make the pastoral leadership of a priest ineffective.

A priest motivated by position is inclined more to emphasize his authority than his service to others. Here, the decisions are made without understanding and compassion. Authority is viewed as a personal title rather than a vocation and responsibility given by God. Jesus was angry with the Scribes and Pharisees because they were too much concerned about honour and position. Very often the desire for power and domination arises out of a poor and insecure self-image. If a person is insecure in himself or in his job, he will tend to dominate others.

There are some leaders who want to impress people with their achievements. They want fame because they desire people to know how great they are. Pastoral leader whose life is controlled by wanting to be famous needs self-denial. Often boasting about one's own achievements is a manifestation of his inferiority complex.

There are leaders who are really task-masters. Goals are the

chief motivating force in their life. Goals are good, but they become improper when controlled by the more syndrome. We want more than last year. If they do not do better, they become depressed and unhappy. The desire to achieve can be good and productive but it can also detract and hinder us in accomplishing the will of God. Some priests get involved in unhealthy comparison with the work of other priests. We all are working for the kingdom of God and there is no need for unhealthy competition among priests. Rivalry for power between priests and jealousy of others' achievements is a terrible force for destruction.

Hence, a united presbyterate is like a rock. Even the apostles around Jesus, sometimes behind his back, argued about who was the greatest among them. They were talking about it even during the last supper. Maybe, it is because of their rivalry that Jesus got up from the table and washed their feet. Rivalry between members of the presbyterate often becomes more apparent during the time of new appointments and transfer to various positions. There can also be rivalry over who is more spiritual or intellectual. These struggles for power and influence are deeply rooted in our human nature. We are afraid we will no longer exist if we do not get a good position. We are so quick to equate function and person, popularity and quality of being.

As I conclude my circular, I ask you to continue to pray for the intentions of the Eparchy. Let us re-dedicate ourselves to serve the Lord with greater enthusiasm and commitment. May the Lord continue to bless you and your ministries!

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb ★ Diocese of Thuckalay ★

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

George Cardinal Alencherry
Major Archbishop
Syro-Malabar Church

**Prot.No.1325/2021**

## சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் (6-12 ஜனவரி 2022)

# உயர் பேராயரின் சுற்றுமடல்

சீரோ மலபார் திருஅவையின் தலைவர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்பு பணியின் கீழ் தரப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது,

இறை இயேசுவில் ஆன்பான சகோதரர் சகோதரிகளே,

மைலாப்பூரில் வைத்து கி.பி. 72 ஆம் ஆண்டு இரத்தசாட்சியாக கொல்லப்பட்ட புனித தோமாவின் திருத்தொண்டுப் பணிகளின் பயனாக இந்தியாவில் முதல் கிறிஸ்தவ சமூகமானது உருவானது. புனித தோமா இரத்தசாட்சியாக மாறியதன் 1950 ஆம் ஆண்டை நாம் 2022 ஆம் ஆண்டில் கொண்டாட இருக்கிறோம். இச்சூழலில், இவ்வாண்டைய சீரோ மலபார் திருத்தொண்டு வாரமானது முக்கியத்துவம் பெறுகிறது. சீரோ மலபார் திருத்தொண்டு வாரமானது, திருக்காட்சி (தெனகா) திருநாளான, ஜனவரி 6 ஆம் தேதி முதல் ஜனவரி 12 ஆம் தேதிவரை ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. 'திருத்தொண்டைப் பற்றி அறிதல் மற்றும் திருத்தொண்டுப்பணியாளராக மாறுதல்' என்னும் விருது வாக்குடன் திருத்தொண்டு வாரமானது அனுசரிக்கப்படுகிறது. புனித தோமாவைப் பற்றி அதிகமாக அறியவும் அவரின் திருத்தொண்டு ஆர்வத்தால் தூண்டுதல் பெறவும் இவ்வாரத்தை உகந்த முறையில் பயன்படுத்திக் கொள்வோம்.

இயேசுவோடு வாழ்ந்து அவரோடிணைந்து செயல்பட்ட புனித தோமா, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா 20:28) என அறிக்கையிட்டு அவ்வறிக்கையை வாழ்வின் இறுதி மூச்சுவரை

வாழ்வாக்கினார். எதிரிகளை அவர் எதிர்கொள்ள நேர்ந்த போது, பாதுகாப்புக் கருதி பின்வாங்கவுமில்லை, தனது பணியைத் துறக்கவுமில்லை. மாறாக, துணிவுடன் முன்னோக்கிப் பயணித்த அவர், கிறிஸ்தவ சமூகங்களை பல இடங்களில் ஏற்படுத்தினார். அவர் ஏற்படுத்திய கிறிஸ்தவ சமூகங்கள் நற்செய்தி ஆர்வத்தை உள்வாங்கிக் கொண்டு துணிவுடன் நற்செய்திக்கு சான்று பகர்ந்தன. நம் சபையைச் சார்ந்த செயலூக்கமுடைய திருத்தொண்டுப் பணியாளர்கள் உலகின் பல்வேறு இடங்களில் துணிவுடன் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தலைமுறை தலைமுறையாக பல நூற்றாண்டுகளாக பகிர்ந்தளிக்கப்பட்ட திருத்தொண்டு ஆர்வம் சுடர்விட்டு ஒளிர்வதன் வெளிப்பாடாக இதைக் காண இயலும். பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் திரு அவையானது நற்செய்தியிலிருந்து விலகாமல் அதை நம்பிக்கையுடன் வாழ்வாக்கும் போது, அஃது ஆண்டு முழுவதும் கனிகளைக் கொடுக்கும் அத்திமரத்திற்கு ஒப்பாக திகழ இயலும் (மாற் 11: 12-14; 2 திமொ 4:2).

இந்தியாவின் கலாச்சாரத்தின் பகுதியாக மார் தோமா கிறிஸ்தவர்கள் மாறுவதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், புனித தோமா நற்செய்தியை மக்கள் மத்தியில் திணிக்கவில்லை; மாறாக, பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு நற்செய்தியைப் போதித்தார். ஒரு குறிப்பிட்ட பண்பாடு மற்றும் மொழியை வேரோடு பிடுங்கிட முயன்றால் தடைச்சுவர்கள் எழும்பும் என்பது வரலாறு தரும் பாடம். தாங்கள் மேற்கொள்ளும் நற்செய்திப் பணியானது பயன்மிக்கதாக அமைய வேண்டுமாயின், திருத்தொண்டுப் பணியாளர்கள், அக்குறிப்பிட்ட பண்பாடு மற்றும் மொழியோடு தங்களை தகவமைத்துக் கொண்டாக வேண்டும்.

நற்செய்தியை ஏற்கனவே ஏற்றுக் கொண்டவர்களை கவனிக்கும் பணியாக மேய்ப்புப்பணி சுருங்கிவிடக் கூடாது. நம்பிக்கைக் கொண்ட சமூகத்தின் முதிர்ச்சியின் வெளிப்பாடாக திருத்தொண்டுப் பணி இருக்கிறது எனத் திரு அவை அறிவுறுத்துகிறது (Verbum Domini – இறைவார்த்தை, 95). நற்செய்தியானது பொதுவெளியில் பறைசாற்றப்பட வேண்டும். திரு அவையானது, துன்புறுத்தல்களைக் கண்டு துவண்டு ஒதுங்காமல் துணிவுடன் இறைவார்த்தையை போதிக்கும், தூய ஆவியாரால் தூண்டப்பட்ட மனிதர்களை அப்பணியில் ஈடுபடுத்துவதில் கவனம் கொள்ள வேண்டும் (1கொரி 2-5). மீட்பின் நற்செய்தியை எல்லா நபர்களுக்கும் அறிவிக்க வேண்டியப் பணியை திரு அவையானது கடமையாகக் கொண்டுள்ளது (உரோ 1:14). இறப்பைப் பற்றிய அச்சம் புனித தோமாவை தீண்டவில்லை என்பதே உண்மை. அங்ஙனமே, உண்மையான திருத்தொண்டுப் பணியாளர்,

துன்புறுத்தல்களையும் இறப்பையும் பற்றி அச்சம் கொள்ளக்கூடாது. இன்றைய உலகின் சவால்களை சந்திக்க நேர்கையில், உறுதியான நிலைப்பாடும், திருத்தூது ஆர்வமும் நம்மைத் தூண்டி எழுப்ப வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2021 ஆம் ஆண்டைய நற்செய்தி அறிவிப்பு ஞாயிறுக்கான செய்தியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். தொடக்க கால கிறிஸ்தவர்கள், அக்காலத்தில் நிலவிய அச்சுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் கண்டு ஒதுங்காமல், ஆண்டவராகிய கிறிஸ்துவை நெருங்கிச் சென்றார்கள், அவர் அளித்த புதிய வாழ்வை உறுதியாக பற்றிக் கொண்டார்கள். மக்கள் நடுவில் நேர்மையான அன்புடனும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடனும் ஆண்டவரின் பெயரில் சென்று, இறையாட்சியைப் பற்றி தாங்கள் “கண்டதையும் கேட்டதையும்” சாட்சியமாக அளித்தனர். இத்தகைய மனநிலையை இக்காலக் கட்டத்தில் நற்செய்திப் பணியின் போது ஏற்றாக வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இந்தியா முழுவதும் நற்செய்திப் பணியை மேற்கொள்வதற்கான உரிமையை, சீரோ மலபார்த் திருச்சபை பெற்றிருக்கும் இச்சூழலில், திருத்தூதரான புனித தோமாவின் மேய்ப்புப்பணியின் மாதிரியை பின்பற்றி, கிறிஸ்தவ சமூகங்களை எல்லா இடங்களிலும் உருவாக்கும் பொறுப்பு நமக்கு உண்டு. நம்பிக்கைக் கொண்ட ஒவ்வொருவரும் புனித தோமாவில் விளங்கிய நற்செய்தி ஆர்வத்தை தனதாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாப் பங்குகளும் இம்முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் பொதுநிலையினரும் இந்நோக்கத்தை மனதில் கொண்டு ஒன்றிணைவதோடு, பல பயிற்சி வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருத்தொண்டு உணர்வையும் பங்கேற்பையும் அதிகரிக்கச் செய்ய சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட வேண்டும். புனித தோமா மவுண்டில் செயல்பட்டு வரும் நற்செய்தி அறிவித்தலுக்கான சீரோ மலபார் திருத்தொண்டு ஆணையம் திருத்தொண்டுப் பணிகளை ஒருங்கிணைத்து உதவிகள் புரிந்து வருகிறது. சீரோ மலபார் திருத்தொண்டு அலுவலகமும் மறைக்கல்வி ஆணையமும் இணைந்து ஜனவரி 9, 2022 அன்று இணையம் வழியாக நடத்த இருக்கும் திருத்தொண்டு குறித்த வினாடி வினாவில் அனைவரும் பங்கேற்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தொண்டு மனப்பான்மை கொண்ட அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரிகள் மற்றும்

பொதுநிலையினரின் அர்ப்பணமிக்க சேவை வழியாக திருத்தொண்டுப் பணிகளானது தொடர்ந்து நடைப்பெற்று வருகிறது. நற்செய்திப் பணியில் ஈடுப்பட்டிருப்போருக்காக நாம் இறைவனிடம் வேண்டுவதோடு நம்முடைய ஒத்துழைப்பையும் அவர்களுக்கு அளிப்போம். அச்சத்தால் 'மேலறையில்' ஒதுங்கி இருந்த திருத்தூதர்களை தனது உடனிருப்பால் உறுதிப்படுத்தி நற்செய்திப் பணிக்கான ஆர்வத்தை தூண்டி எழுப்பிய தாய் மரியா நமக்காக பரிந்து பேசுவாராக! விசுவாசத்தின் தந்தையாகிய மார்த்தோமாவின் பரிந்துரை நமது நற்செய்திப் பணிகளுக்கு ஆற்றலை அளிப்பதாக!

ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி

சீரோ மலபார்த் திருஅவையின் உயர் பேராயர்

காக்கனாடு மவுண்ட் சென்ட் தோமஸில் செயல்படும், சீரோ மலபார்த் திருச்சபையின் தலைமைச் செயலத்கதிலிருந்து டிசம்பர், 18, 2021 அன்று வெளியிட்டது.

1. இச்சுற்றுமடல், ஜனவரி 03, 2022 ஆன்று திருப்பலிக்கிடையே அனைத்து பங்குகளிலும், சிற்றாலயங்களிலும் வாசிக்க வேண்டும்.

2. ஒரு வாரகால மிஷன் கொண்டாட்டம் வழியாக கிடைக்கப்பெறும் நிதியை காக்கனாடு, செயின்ட் தோமஸ் மவுண்ட் இல் உள்ள Syro Malabar Mission அவலகத்தில் பிப்ரவரி, 28, 2022 க்கு முன்பு கிடைக்கும்படி செய்யவும்.

| வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா பிரிவின் ஒன்பதாம் ஆண்டு | பிப். 09 |
| அருட்தந்தையருக்கான தொடர் பயிற்சி | பிப். 23 |
| அருட்தந்தையர் தொடர் பயிற்சி, துறைகளின் அறிக்கை | பிப். 24 |

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/37/2021**

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

“இணைந்து பயணிக்கும் திருச்சபையாக” - ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்ற பிறகு காலத்தின் தேவைக்கேற்ப “இணைந்து பயணிக்கும் திருச்சபையாக" - ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு என்னும் தலைப்பில் அடுத்த ஆயர் மாமன்றத்தை 2023 ஆம் ஆண்டு நடத்துவதாக அறிவித்துள்ளார். அதன் தொடக்க விழாவை அக்டோபர் 9, 10 ம் தேதிகளில் உலகளவில் நடத்த அறிவித்தார். நமது மறைமாவட்டத்தில் இதன் தொடக்க விழாவானது அக்டோபர் 17, 2021 அன்று படந்தாலுமூட்டில் வைத்து திருப்பலியுடன் நடத்தப்பட்டது. இதில் மறைமாவட்ட பிரதிநிதிகளாக மறைமாவட்ட மாமன்ற ஒருங்கிணைப்பு குழுவினரும், மறைவட்ட முதன்மை குருக்களும், அருட்சகோதரிகளும், பொதுநிலையினரின் பிரதிநிதிகளாக படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய பங்கு மக்களும் பங்கேற்றனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு ஆகியவற்றை மாமன்றத்தின் மையப்பொருளாக அறிவித்துள்ளார். ஒன்றிப்பு என்பது, மூவொரு கடவுளின் அன்பிலும் ஒன்றிப்பிலும் நாம் ஒருவரோடு ஒருவர் இணைந்திருக்கிறோம் என்பதையும், பங்கேற்பு வழியாக கத்தோலிக்க இறைமக்கள் அனைவரும் திருவருட்சாதனங்கள் வழியாக ஒருவர் ஒருவருக்கு பணிபுரிய அழைக்கப்பட்டவர்கள் என்பதையும், கடைநிலையில் மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள் என உணர்பவர்களை ஒன்று சேர்ப்பதை

குறிக்கிறது. நற்செய்தி அறிவிப்பதற்காகவே திருச்சபை உள்ளது என்பதை உணர்த்தி, சிறந்த வாழ்வு வழியாக மற்றும் சான்று வாழ்வு வழியாக நற்செய்தி அறிவிப்பதை சுட்டிக்காட்டுகிறது.

உலக ஆயர்கள் மாமன்றத்தில் Logo, இலட்சினை, விளக்க இந்நேரத்தை பயன்படுத்துகின்றேன். இந்த Logo - வில் விண்ணைத்தொடும் ஞானமும் ஒளியும் நிறைந்த பெரிய கம்பீரமான மரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அபார வலிமையும் நம்பிக்கையும் கொண்டதாக சிலுவையை இது பிரதிபலித்து நிற்கிறது. கதிரவன் போன்று ஒளி உமிழும் வட்ட வடிவிலான நற்கருணையை அது கனியாக்கிறது. கைகளாக சிறகுகளாக விரிந்துள்ள அதன் கிளைகள் தூய ஆவியாரைக் குறிக்கின்றன. இறைமக்கள் தேக்க நிலையில் இல்லாமல் ஆயர்களோடு இணைந்து பயணிக்கின்றனர். இந்த வாழ்வின் மரம் அவர்கள் அனைவருக்குள்ளும் சுவாசமாகும் பொது உடைமையான இயக்க உந்துதலால், இம் மரத்திலிருந்தே தங்கள் பயணத்தை தொடங்குகின்றனர்.

இக்கூட்டு பயணத்தில் இடம் பெற்றுள்ள 15 நிழல் உருவங்கள் நம் மனிதத்தின் அனைத்து வாழ்க்கை சூழல்களையும், தலைமுறையினரையும் தங்களுக்குள் கொண்டுள்ளன. இந்த பன்முகத் தன்மையை வலியுறுத்தும் ஒளிமயமான பல வண்ணங்களே மகிழ்ச்சியின் அடையாளங்களாய் உள்ளன. இளையோர் முதியோர், ஆண்கள், பெண்கள் இளம்பருவத்தினர், குழந்தைகள், பொதுநிலையினர், துறவியர், பெற்றோர்கள், தம்பதியர்கள், மாற்று திறனுடையோர் அனைவருமாக சமதளத்தில் பயணிக்கின்றனர். ஆயரும் துறவியரும் அவர்களின் முன்னிலையில் இல்லாமல் அவர்களிடையே பயணிக்கின்றனர். இதையை இந்த Logo குறிக்கிறது.

2021-ம் ஆண்டு அக்டோபர் முதல் 2022-ம் ஆண்டு ஏப்ரல் வரை மறைமாவட்டத்தில் பல்வேறு தயாரிப்பு நிகழ்வுகள் நடைபெறும். இது இறைமக்களின் கருத்தறிதல் மற்றும் பங்கேற்புடன் நடைபெறும். 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை மாமன்ற தயாரிப்புப் பணிகள் உலக நாடுகளின் கண்டங்கள் வாரியாக நடைபெறும். அதற்குபின் 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தோடு இது நிறைவடையும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மாமன்றத்தின் கருத்துக்களை மறைமாவட்ட அளவில் அருட்தந்தையர், துறவியர், இறைமக்கள், கிறிஸ்தவ

ஒன்றிப்பு குழுக்கள் மற்றும் பல்சமய குழுக்கள் அனைவரையும் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்களை சீரோ-மலபார் திருச்சபையின் ஆயர் பேரவைக்கு அனுப்பி வைக்க நம்மைக் கேட்டுக்கொண்டுள்ளார். மக்களின் கருத்துக் கணிப்புக்களை பங்களவில் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் சேகரிக்கப்படும். நமது மறைமாவட்டத்தில் கருத்து சேகரிப்பு ஒருங்கிணைப்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களையும் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களாக பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், அருட்தந்தை ஜிம்மி தெக்கேக்கடுமத்தில், அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ், திரு மணிவண்ணன், திரு வில்சன் மற்றும் திருமதி சசிகலா விஜயகுமாரி ஆகியோரை நியமித்துள்ளேன். இவர்களுக்கு உங்களது முழு ஒத்துழைப்பையும் அளிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நமது மறைமாவட்டத்தில் “இணைந்து பயணிக்கும் திருச்சபையாக" என்னும் மாமன்றத்தின் கருத்து சேகரிப்பு 2022 ஜனவரி மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை அனைத்து பங்குகளிலும் நடைபெறும். இதற்காக ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் கருத்து சேகரிப்பு உதவி செய்ய உதவியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மறைமாவட்ட அளவில் பயிற்சி அளிக்கப்படும். பங்குத்தந்தையர்கள் தங்களது பங்கில் இருந்து உதவியாளர்களை தேர்வுசெய்து அவர்களது பெயர்களை குறிப்பிட்ட நாளில் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்புகள்:

1. அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் மறைமாவட்ட அளவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு கருத்து சேகரிக்கப்படும்.
2. மறைமாவட்ட அளவில் பங்குகளிலிருந்து சுமார் 50 நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுக்கு ஜனவரி 16, 2022 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் 04.30 மணி வரை பயிற்சி அளிக்கப்படும்.
3. மறைவட்ட அளவில் பங்கின் ஒரு உறவியத்திற்கு இரண்டு பேர் என்னும் விகிதத்தில் பொறுப்பாளர்களை நியமித்து அவர்களுக்கு மறைவட்ட பங்குகளில் வைத்து ஜனவரி 30, 2022 அன்று பயிற்சி அளிக்கப்படும்.
4. பங்களவிலான பயிற்சிகள் பிப்ரவரி 13, 2022 அன்று படந்தாலுமூடு நித்திரவிளை, சூசைப்புரம் மற்றும் தக்கலை-பிலாங்காலை ஆகிய மறைவட்டங்களிலும் பிப்ரவரி 20, 2022 அன்று ஆறுகாணி, மஞ்சாலுமூடு, களியல் மறைவட்டங்களிலும் செங்கோட்டை மறைத்தொண்டு தளத்திலும்

வைத்து நடைபெறும்.

5. பங்களவில் நடைபெறுகின்ற பயிற்சியில் கைக்காரர்கள், அருட்சகோதரிகள், மறைக்கல்வி ஆசிரியர்கள், உறவிய தலைவர்கள், இளையோர், மாதர்ஜோதிஸ் உறுப்பினர்கள், பங்குப்பேரவை உறுப்பினர்கள், 10 முதல் 12 வரை படிக்கின்ற மாணவ-மாணவியர்கள் ஆகியோர் கலந்துகொள்ள வேண்டும்.

6. பங்களவில் ஒரு ஞாயிற்றுக்கிழமை பயிற்சியும் அதைத்தொடர்ந்து வருகின்ற ஞாயிற்றுக்கிழமை உறவியங்களில் கலந்து உரையாடலும் நடைபெறும்.

7. கருத்து சேகரிப்புக்காக திருத்தந்தை அவர்கள் அளித்துள்ள பத்து உட்பொருட்களை அடங்கிய கேள்விகள் உங்களுக்கு கொடுக்கப்படும். கருத்துக்கள் அனைத்தும் அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டு தூய ஆவியாரின் தூண்டுதலால் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இருத்தல் வேண்டும். தன்னலம் இன்றி திருச்சபையின் நலன் கருதி உங்களது கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இக்கேள்விகளுக்கான பதில்கள் சுருக்கமான வடிவிலும், 5 பக்கங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். பங்குகளின் கருத்துக்களை பிப்ரவரி 28, 2022 அன்று மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் பங்குத்தந்தையர்கள் ஒப்படைக்க வேண்டும்.

கருத்து அமர்வுகள் நடைபெறும் நாட்களும் அதில் பங்கேற்பவர்களும்:

| | |
|---|---|
| ஜனவரி 4, 2022<br>காலை 10.00 - 03.30 | அருட்தந்தையர்களும்<br>அருட்சகோதரிகளும் |
| ஜனவரி 8, 2022<br>காலை 10.00 - 03.30 | அருட்தந்தையர்களும்<br>அருட்சகோதரிகளும் |
| ஜனவரி 16, 2022<br>பிற்பகல் 2.00 - 4.30 | மறைமாவட்ட பிரநிதிக்குழு (50 பேர்) |
| ஜனவரி 30, 2022<br>பிற்பகல் 2.00 - 04.30 | பங்கிலிருந்து ஒரு உறவியத்திற்கு இருவர் என்னும் விகிதத்தில் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும். |

<table>
<tr><td colspan="2">பங்களவில் கருத்து அமர்வில் பங்குக்கொள்வோர்: அருட்தந்தைகயர், அருட்சகோதரிகள், கைக்காரர்கள், பங்குப்பேரவை உறுப்பினர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், உறவிய தலைவர்கள், இளையோர், பக்தசங்கங்கள் மற்றும் மாதர்ஜோதிஸ் உறுப்பினர்கள் மற்றும் 10 முதல் 12 வரை படிக்கின்ற மாணவ மாணவியர்கள்.</td></tr>
<tr><td>பிப்ரவரி 13, 2022<br>திருப்பலிக்குப்பின்</td><td>படந்தாலுமூடு நித்திரவிளை, சூசைப்புரம் மற்றும் தக்கலை-பிலாங்காலை ஆகிய மறைவட்டங்கள்.</td></tr>
<tr><td>பிப்ரவரி 20, 2022<br>திருப்பலிக்குப்பின்</td><td>ஆறுகாணி, மஞ்சாலுமூடு, களியல் மறைவட்டங்களிலும் செங்கோட்டை மறைத்தொண்டு தளங்கள்.</td></tr>
<tr><td>பிப்ரவரி 20 மற்றும் 27, 2022</td><td>உறவியங்களில் கருத்து அமர்வு</td></tr>
<tr><td>பிப்ரவரி 28, 2022</td><td>கருத்துகள் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டிய இறுதிநாள்.</td></tr>
</table>

அன்பான இறைமக்களே அனைவரும் திருத்தந்தையோடு சேர்ந்து திருத்தந்தையின் மனநிலையை உணர்ந்தவர்களாக "இணைந்து பயணிக்கும் திருச்சபையாக" என்னும் மாமன்றத்தின் கருத்து சேகரிப்பு பணியில் அனைவரும் ஒத்துழைத்து உங்களது பங்களிப்பை முழுமனதுடன் உலகளாவிய திருச்சபையின் ஒருங்கிணைந்த பயணத்திற்கு உதவி செய்ய உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் பங்குகளுக்கு வருகை தருகின்ற மறைமாவட்ட பிரதிநிதிகளுக்கு உங்களது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அதற்கான அனைத்து ஆயத்தங்களையும் பங்குதந்தையர் செய்து கொடுக்க வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் உங்களை ஆசீர்வதிப்பராக!

என்றும் ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலானது 09.01.2022 அன்று திருப்பலிக்குப் பின்னர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் சிற்றாலயங்களிலும் வாசிக்கவும்.



# CATECHISM மறைக்கல்வி

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்."
(மாற்கு 16:15)

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்.

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு மறைக்கல்வி மாணவர்களை ஆயத்தப் படுத்தும் நோக்கத்துடன், 4 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கு 25 நாட்கள் விவிலியத்தை மையமாகக் கொண்ட செயல்கள் வழங்கப்பட்டன. அவை அனைத்தும் 'குழந்தை ஈசோவுக்கு என் அன்புப் பரிசு' என்னும் தலைப்பில், தாளில் அச்சிடப்பட்டு அனைத்து மறைக்கல்வி மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. அதில் ஒவ்வொரு நாளும் வாசிக்க வேண்டிய விவிலிய வசனம், சிறுஜெபம், ஜெபக்கருத்து, நற்செயல், பரிசு ஆகியவை கொடுக்கப்பட்டிருந்தன.

மறைக்கல்வி நிலையத்தின் கிறிஸ்து பிறப்பு விழாக் கூட்டம் தலைமையாசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள் மற்றும் மறைவட்ட செயலர்கள், பங்கேற்க டிசம்பர் 2021 அன்று கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு குரு குல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்சகோதரி மார்கிரட் அவர்கள் விவிலியம் வாசித்து தொடக்க செபம் செய்தார்கள். பின் ஊக்குவிப்பாளர் திரு. கிரிஸ்து தாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். பின்னர் குரு குல முதல்வர் பேரருட் தந்தை அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் வாழ்த்துரை வழங்கினார். பேரருட்தந்தை அவர்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துரையில் நம்முடைய விசுவாசம் உயிருள்ளதாக இருக்க வேண்டும் என்றும் நமக்கு கிடைத்த விசுவாசத்தை அடுத்த தலை முறைக்கு எடுத்து சொல்ல வேண்டும் என்றும் கிறிஸ்துவை பறைசாற்றுபவர்களாகிய ஆசிரியர்கள் தங்கள் வாழ்வை கிறிஸ்தவ வாழ்வாக வாழ்ந்து காட்டுபவர்களாகத் திகழ வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் மறைக்கல்வி தலைமையாசிரியர்கள் மற்றும் அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறினார். மேலும் இவ்வாண்டு அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் ஊக்குவிப்பாளர்களுக்கும் டயரி மற்றும் கேக் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பரிசாக வழங்கப்பட்டது. தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை. பிரின்ஸ் அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் கூறி ஒத்துழைப்பு கொடுக்கின்ற அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும் விவிலியக் கலைவிழா ,மறைவட்டப் போட்டிகள் நடக்கும் தேதி மற்றும் இடம் அறிவிக்கப்பட்டது.

விவிலியக் கலைவிழா, மறைக்கல்விப் போட்டிகள் சிறப்பாக நடத்த அனைவரும் ஒத்துமைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தின் போது மாணவர்களின் இரண்டாம் பருவத் தேர்வுக்கான வினாத்தாள் தயாரிக்க 1 முதல் 9 வகுப்பு வரையுள்ள மாணவர்களில் தமிழ் மற்றும் மலையாளம் தனித்தனியாக மறைக்கல்வி நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான விவிலிய வினாடி வினாப் போட்டிகளுக்கான பெயரும் VPV Book List உம் மறைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறினார். தொடர்ந்து திரு. செல்வன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இக்கூட்டமானது 4.30 மணியளவில் முடிவுற்றது. அனைவருக்கும் கேக் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

### *விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள் :*

2021-2022 ஆம் ஆண்டு விவிலியக் கலை விழா மறை வட்டப் போட்டிகள் நடைபெறும் மறைவட்டம், தேதி, இடம், போட்டிகள் போன்ற விபரங்கள் கீழேத் தரப்படுகின்றன.

FORANE LEVEL

| | |
|---|---|
| Thuckalay- Pilankalai: | 28.12.2021, St. Michael's HSS School, Kattathurai |
| Soosaipuram: | 28.12.2021- A.P.J.M. HSS School, Soosaipuram |
| Kaliyal: | 29.12.2021- St. Mary's HSS School, Kaliyal |
| Manjalumoodu: | 29.12.2021- Holy Family HSS School, Mukkoottukkal |
| Nithiravilai | 30.12.2021- Jaya Matha HSS School, Christurajapuram |
| Padanthalumoodu | 30.12.2021- S.H. School, Padanthalumoodu |
| Arukany | 31.12.2021- Holy Family HSS School, Arukany |

INDIVIDUAL ITEMS:

Sub Juniors

BOYS

1. Single Song (3 mts)
2. Speech (3 mts)
3. Bible Sent.Recitation (3 mts)

GIRLS

1. Single Song (3 mts)
2. Speech (3mts)
3. Single Dance

Juniors

BOYS

1. Single Song (3 mins)
2. Speech (3 mins)
3. Bible Reading (3 mins)

GIRLS

1. Single Song (3 mins)
2. Speech (3mins)
3. Single Dance

Seniors

BOYS

1. Single Song (3 mins)
2. Speech (3 mins)
3. Mono Act (3 mins)

GIRLS

1. Single Song (3 mins)
2. Speech (3mins)
3. Mono Act (3 mins)

Super Seniors

BOYS

1. Single Song (3 mins)
2. Speech (3 mins)
3. Mono Act (3 mins)

GIRLS

1. Single Song (3 mins)
2. Speech (3 mins)
3. Mono Act (3 mins)

GROUP ITEMS:

Boys and Girls – Group Song (5 mins)

1. Speech:

Sub Juniors

அழியா நாவுடைய புனித அந்தோனியார்

Juniors

மன்னிப்பின் சிகரம் : திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல்

Seniors

நற்கருணை ஆண்டவரின் இணைய உலக திருத்தூதர் : அருளாளர் கார்லோ அக்குத்திஸ்

Super Seniors

புனித யோசேப்பு : பொறுப்புள்ள தந்தை

2. Mono Act- Super Seniors and Seniors

திருத்துதர் பணிகள் 9, 1-19

3. Bible Sent.Recitation Sub Junior Boys

திருப்பாடல்கள் 23, 1-6

### *விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள்*

2021-2022 ஆம் ஆண்டு விவிலியக் கலை விழா மறைவட்டப் போட்டிகள் நடைபெற்றன. டிசம்பர் 28 அன்று தக்கலை பிலாங்காலை மற்றும் சூசைபுரம், டிசம்பர் 29 மஞ்சாலுமூடு மற்றும் களியல், டிசம்பர் 30 நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு, டிசம்பர் 31 ஆறுகாணி மறைவட்டங்களுக்கும் நடத்தப்பட்டது. மறை வட்டப் போட்டிகள் அனைத்தும் மறைவட்ட இயக்குநர்களான பேரருட்தந்தை. ஆன்றனி ஜோஸ் (சூசைபுரம் மறைவட்ட இயக்குநர்) அருட்தந்தை அபிலாஷ் (படந்தாலுமூடு மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குநர்) அருட்தந்தை ஜோமோன்; (நித்திரவிளை மறைவட்ட இயக்குநர்) அருட்தந்தை கொச்சுமோன் (ஆறுகாணி மறைவட்ட இயக்குநர்) அவர்களின் தலைமையில் 9.30 மணிக்கு தொடக்க விழாவுடன் ஆரம்பமானது, அனைத்து மறைவட்டங்களிலும் மறைமாவட்ட இயக்குநர்கள் மற்றும் இயக்குநர், உதவி இயக்குநர்கள் மற்றும் செயலர்கள், ஊக்குவிப்பாளர்கள் குத்துவிளக்கேற்றி விவிலியக் கலைவிழா போட்டிகளை தொடங்கி வைத்தனர். போட்டிகள் அனைத்தும் மறைவட்ட இயக்குநர்கள் தலைமையிலும் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில், உதவி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. போட்டிகள் காலை 10.00 மணிக்கு தொடங்கி மாலை 4.30 மணிவரை 3 அரங்குகளில் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கு பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது. இக்கலைவிழாவிற்கு ஒத்துழைப்பு தந்த மறைவட்ட இயக்குநர்கள் மற்றும் செயலர்கள் ஊக்குவிப்பாளர்கள், தலைமையாசிரியர்கள், அனைத்து அருட்தந்தையர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

***Mission Quest. 2022:***

சீரோ-மலபார் திருதூது நிலையம் மற்றும் மறைதூது ஆணையம் இணைந்து நடத்திய வினாடி வினாப் போட்டி நற்செய்தி நிலையம் வழியாக மாணவர்கள் மற்றும் பெரியவர்களுக்காக இணைய தளம் மூலமாக ஜனவரி 9 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை நடத்தப்பட்டது. மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் இவ்விவிலிய வினாடி வினாப் போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்று பரிசுகளையும் பெற்றனர். அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்

இயக்குநர்

| BIRTHDAYS OF REV. FATHERS - FEBRUARY - 2022 | |
|---|---|
| Fr. Jose Vayalil | 01 |
| Fr. Santhosh Kayyalaparampil CMI | 10 |
| Fr.Jinu Thekkethalackal | 15 |
| Fr. Seby Manimalakandathil | 21 |
| Fr. Jipson Chully MCBS | 22 |
| Fr.Joshy Kulathumkal | 28 |
| Fr. Prince Maliyil | 28 |

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"குழந்தாய், நான் சொல்வதைக்கேள், அதனால் அறிவு பெறு; என் சொற்கள் மீது உன் கருத்தைச் செலுத்து."***

***சீராக்: 16:24***

### *கிறிஸ்துமஸ் கூடுகை*

05.12.2021 அன்று மஞ்சாலுமூடு, ஆறுகாணி, களியல் மறைவட்டங்களுக்கான கூட்டமானது மஞ்சாலுமூடு குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்திலும், 12.12.2021 அன்று சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை, நித்திரவிளை, படந்தாலுமூடு போன்ற மறைவட்டங்களுக்கான கூட்டம் கல்லுவிளையில் இல்வாழ்வு இயக்குனர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒருவருடம் நடந்த நிகழ்வுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. மேலும் கலைவிழா நிகழ்த்துவது பற்றி ஆலோசித்து, பிப்ரவரி மாதத்தில் நடத்துவது பற்றி தீர்மானிக்கப்பட்டது.



**போட்டிகளின் விவரம் பின்வருமாறு:**

Infants- 01-01-2016 – க்குப் பிறகு பிறந்த குழந்தைகள்

Child- 01-01-2012- க்குப் பிறகு பிறந்த குழந்தைகள்

Infants-

1. இறைவார்த்தைகள் சொல்லுதல் (சீராக்கின் ஞானம் 6:18-33)
2. செய்கைப் பாடல்

Child-

1. கதாப்பிரசங்கம் (புனித யோசேப்பு)
2. குழுநடனம்

இறுதியில் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி இயக்குனர் அவர்களால் அனைவருக்கும் வழங்கப்பட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

பின் இறுதி ஆசீர்வாதத்துடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

### செங்கோட்டை மிஷன்

குழந்தை ஈசோ இயக்கம் தொடங்குவதற்காக இயக்குனர் தலைமையில் பொறுப்பாளர்கள் இணைந்து 26-01-2021 அன்று புதன்கிழமை செங்கோட்டை மிஷனுக்கு சென்றனர்.



அங்கு வாஞ்சிநகர் ஆலயத்தில் அனைத்து குழந்தைகளையும் ஒன்று சேர்த்து, இயக்குநர் அவர்களால் குழந்தைகளுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டது. குழந்தைகள் இறைவார்த்தைகள் படிக்க வேண்டும், பிறரன்பு பணி செய்ய வேண்டும், பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்படியவேண்டும் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் விவிலியத்திலுள்ள மொத்த புத்தகங்கள் எத்தனை? அவைகள் எவை? என்பது பற்றியும் மிகத் தெளிவாக குழந்தைகள் மனதில் பதியும் வகையில் வகுப்புகளை நடத்தினார்.

குழந்தைகளை உற்சாகப்படுத்த செய்கைப்பாடல்களும், விளையாட்டுகளும் பயிற்று வித்து ஊக்கப்படுத்தினார். வருகை தந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஜெபமாலை மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து செங்கோட்டை மிஷனின் அனைத்து ஆலயங்களிலும் குழந்தை ஈசோ இயக்கம் சிறப்பாக நடைபெறும் என்பதும் உறுதி செய்யப்பட்டது. பின்னர், இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவடைந்தது.

இயக்குநர்
அருட்தந்தை ஜோமோன்
மங்கலாமடத்தில்

சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன் லீக்

சிறுமலர் மிஷன்லீக் இயக்கத்தின் பவள விழாவின் மறைமாவட்டத் துவக்கவிழா 02-01-2022 அன்று மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில், இயக்குநர் தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

காட்டாத்துறை மாணவர்கள் இறைவணக்கம் பாட, திரு. ஞானதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் மிஷன்லீக் இயக்கம் வாயிலாக தான் பெற்ற இறையழைத்தலை பற்றியும் நற்செய்திப்பணியின் ஒரு ஏணிப்படியாக மிஷன்லீக் இயக்கம் உள்ளது என்றும் இன்றும் பவளவிழா காண ஆயத்தமாகும் இவ்வியக்கம் மேலும் மேலும் வளர்ந்து பலன்கொடுக்க இறைவனை வேண்டியும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்பு இயக்குநர் தந்தை அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டிற்கான செயல்திட்ட அறிக்கையை சமர்பித்தார்கள்.

அதில் குறிப்பிட்ட சில திட்டங்கள்,

- திருச்சபையோடு இணைந்து செயல்படும் ஒரு இயக்கமாக இவ்வியக்கம் செயல்பட வேண்டும்.
- செயல்திட்டங்கள், பங்கு மறைவட்ட மற்றும் மறைமாவட்ட அளவில் நடைபெறல்.
- ஞாயிற்றுக்கிழமை கூட்டங்களை முறைப்படுத்துதல்
- இரண்டாம் சனிக்கிழமைகளை மிஷன்லீக் இயக்கத்திற்காக ஒதுக்குதல். அன்றையதினம் திருப்பலி, தியானம் மற்றும் ஜெபவழிபாடுகள் நடத்துதல்.
- விடுமுறை நாட்களைப் பயன்மிக்கதாக மாற்றுதல்.
- திருத்தொண்டுத் தளங்களுக்காக ஜெபித்தல். அதாவது உலகளாவிய திருச்சபை, திருத்தொண்டு நிலையங்கள், மறைமாவட்ட திருத்தொண்டுத் தளங்கள் ஆகியவற்றிற்காக செபித்தல்.
- பவள விழாவை முன்னிட்டு மெகா வினாடி வினாப் போட்டிகள் நடத்துதல்.
- தேர்ப்பயணம் நடத்துதல்
- மறைமாவட்ட எல்லா பங்குகளிலும் மிஷன் ஒளியேற்றல்.
- இறையழைத்தல் ஊக்கப்படுத்தல் (பங்களவில் குறும்படம் தயாரித்தல்)
- செயற்குழு எல்லா தளங்களையும் பார்வையிடல்

- CML National Team visit
- மிஷன் visit (North India)....

மேலும் பல செயல்திட்டங்கள் செயல்படுத்த உறுதியளிக்கப்பட்டது.

திருமதி. சினேக லதா அவர்கள் மிஷன்லீக் இயக்க வரலாறு (தொடக்கம் முதல் இன்று வரை) சமர்பித்தார்கள். தொடர்ந்து குத்து விளக்கேற்றி விழாவிற்கு ஒளியேற்றினார்கள்.

மேதகு ஆயர் அவர்கள் தலைமை உரையாற்றும் போது, உலகின் எல்லா நாடுகளிலும் சீரோ மலபார் பரவி இருக்கும் இடங்களிலெல்லாம் சிறுமலர் இயக்கம் இயங்குகிறது என்றார். இவ்வியக்கம் இரு நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

i. திருத்தொண்டுப் பணிகளில் ஈடுபடுதல்

ii. பொருளாதார உதவி செய்தல்

விரிவாக்கப்பட்ட இடங்களில் பணியாளர்கள் தேவை இதன் நோக்கத்தை உணர்ந்து



மறைமாவட்டம் செயல்திட்டம் தீட்டுவது நன்று. அத்தோடு இயற்கைச் சீற்றங்கள் நம்மை பயமுறுத்தினாலும் பிள்ளைகள் உற்சாகப்படுத்தும் வகையில் நமது செயல் திட்டங்கள் அமைய வேண்டும். நாம் பவளவிழா கொண்டாட ஆயத்தமாகும் போது மறைமாவட்டத்திலுள்ள சுமார் 3000 பிள்ளைகளும் பயன்படுத்தும் வகையில் பவளவிழா செயல்திட்டங்கள் சென்றடைய வேண்டும். நமது மறைமாவட்டத்திற்கு இறைவன் கொடுத்த இறையழைத்தல் விதையை நேரடியாக விதைக்கப் பாடுபடுவோம்

மனமிருந்தால் மார்க்கமுண்டு என்ற கொள்கையோடு மறைமாவட்ட பொன்விழா காண தயாராகுவோம் என்று வாழ்த்தினார்கள்.

பின்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

Online வழியாக நடந்த மிஷன் வினாடிவினா போட்டி (பங்கு பெயர்)

I. St. Alphonsa – Nagercoil

II. St.Martin De Porres - Kazhuvanthittai

III. St.Mary's- Kaliyal

மலர் தயாரித்தல்

I. St. Thomas – Muzhucodu

II. St. Thomas – Netta

III. St. Thomas – Muzhucodu

IV.St. George – Munchirai

V. St. Mickael – Kattathurai

பாடல் போட்டி

I. St. Thomas – Muzhucodu

II. St. Alphonsa – Nagercoil

III. St. Alphonsa – Nagercoil

மறைமாவட்ட வெள்ளிவிழா மலர் தயாரித்தல் (Offline)

I. St. Thomas – Muzhucodu

II. St. Thomas – Netta

III. St.James – Mankarai

சிறந்த அட்டைப்படம்

St. Thomas – Netta

நிகழ்வின் போது மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இறுதியாக, திருமதி. லதா அனைவருக்கும் நன்றி கூற, ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் விழா இனிது நிறைவுற்றது.

## செயற்குழு

25-01-2022 அன்று மாலை 7 மணிக்கு Google meet வாயிலாக செயற்குழுகூட்டம் நடைபெற்றது. தொடக்க ஜெபத்துடன் இயக்குநர் தந்தை அவர்கள் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். தந்தையவர்கள் பேசும் போது மறை மாவட்டத்திலிருந்து பெறப்படும் தகவல்கள் எல்லா பங்குகளிலும் சென்றடைய வசதியாக இணையதள வசதி (Net work connection) உருவாக்குதல். இதற்காக செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்க வேண்டும். சிறுமலர் இதழ் வெளியிடுவதோடு, புனிதர்கள் வரலாறுகளை பிள்ளைகளைக் கொண்டு படிக்க வைத்தல் போன்றவற்றை செய்ய வலியுறுத்தினார். பிப்ரவரி மாதம் Online வழியாக போட்டி ஒன்று நடைபெறும் என்றும் அறிவித்தார். அது பவளவிழாவிற்கு தயாராகும் நமது இயக்கத்தைச் சமர்ப்பித்து மாணவர்கள் ஏறெடுக்கும் ஜெபங்களாக இருக்கும். அதற்கு பரிசுகள் வழங்கப்படும்.

இப்போட்டியானது மணவர்களின் தனி ஜெபம் சொல்லும் பழக்கத்தை வளர்த்தும் என்றார். மேலும் 'ஒரு நாள் ஒரு ரூபாய்' என 365 நாட்கள் 365 ரூபாய் சேமித்தல் என்ற கொள்கையை உருவாக்குதல் போன்றவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டன.

பின் இறுதி ஆசீருடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இப்படிக்கு
அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்
இயக்குநர்.

**MCBS துறவற சபை அருட்தந்தையர்கள் செங்கோட்டை மறைத்தளத்தில் கால் பதித்ததின் வெள்ளி விழா கொண்டாட்டம்**

எம்.சி.பி.எஸ் அருட்தந்தையர்கள் செங்கோட்டை மறைத்தளத்தில் பணியாற்ற துவங்கி 25 ஆண்டுகள் நிறைவுற்றதினை நன்றியுடன் நினைவு கூறும் விதமாக அதன் வெள்ளி விழாவினை 2022 ஜனவரி 18 ஆம் நாள் புனித ஜோஸப் பள்ளிக்கூடத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வருகை தந்து திருப்பலி அர்ப்பித்ததுடன், புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயத்தினையும் அர்ச்சித்தார். அத்துடன் வெள்ளி விழாவிற்கு தலைமை தாங்கினார். எம்.சி.பி.எஸ் துறவற சபையின் மாகாணத் தலைவர் அருட்தந்தை டோமினிக் முண்டத்து அவர்களும் வருகை தந்து வெள்ளி விழாவினை சிறப்பித்தார். அனைவருக்கும் வெள்ளி விழாவின் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் அன்பு விருந்து வழங்கப்பட்டது.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

**சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM**

### *இணைய வழி பொங்கல் விழாப் போட்டிகள்*

பொங்கல் விழாவை முன்னிட்டு இளையோர் இயக்கத்தின் சார்பாக இணைய வழி போட்டிகள் நடைபெற்றது. படம் பார்த்து பெயர் சொல்லும் போட்டியானது ஜனவரி 9 முதல் 11 வரை நடைபெற்றது. வாட்ஸாப் குழுவில் 7 மணி முதல் 7.15 வரை போட்டி நடைபெறும். புனிதர்களின் பெயரை விளக்கும் படக்குறிப்புகள் பதிவிடப்பட்டு இளையோர்கள் கண்டறிந்தனர். இளையோர்களின் நடிப்பு திறனை வெளிப்படுத்தும் விதமாக Reels போட்டி மற்றும் Rangoli போட்டியும் நடத்தப்பட்டது. Reels மற்றும் Rangoli போட்டியில் கலந்து கொண்டவர்களின் வீடியோக்கள் எம் இயக்க Instagram வலைதள பக்கத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றிப் பெற்றோர் விபரம்

Finding the subject : (daily competition)

First Prize : Jenifer, Mukkuttukal
Second Prize : Subila, Paraicode

Rangoli:

First Prize : Steji S.K., Killiyoor
Second Prize : Juhi, Palapallam

Reels:

First Prize : Abisha P, Kulasekharam
Second Prize : Anil Mon, Mangarai

### *இளையோர் கல்வி சேவை பணியகம்*

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் TYES மற்றும் திருச்சி தொன் போஸ்கொ வழிகாட்டி உதவியுடன் TVS Sundaram Brake Linings Ltd, Chennai நிறுவனத்தின் பணியாளர்களுக்கான நேர்முக தேர்வு 29.01.2022 அன்று நடைபெற்றது. எம் இயக்குநர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் திருச்சி தோன் போஸ்கொ வழிகாட்டி வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் திரு. அருமை ராஜ் அவர்களும் பங்கேற்றனர். நேர்முகத் தேர்வில் 11 இளையோர்கள் கலந்துகொண்டனர். 7 இளையோர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிநியமனக் கடிதம் இயக்குனர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது.

# இல்வாழ்வு இயக்கம்



"அமைதியும், போரும் வீட்டிலிருந்து தான் தொடங்குகின்றன. நாம் வாழும் இவ்வுலகில் அமைதியை உருவாக்க விரும்பினால் நமது குடும்பங்களில் ஒருவரையொருவர் அன்பு செய்வதன் மூலம் தொடங்குவோம். இவ்வுலகில் மகிழ்ச்சியைப் பரப்ப விரும்பினால் ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்." - அன்னை தெரசா

## *இல்வாழ்வு இயக்கம்*

இக்காலகட்டமானது மக்கள் பொருள் இழப்பினாலும், உயிர் இழப்பினாலும், பாதிக்கப்பட்டு மன அழுத்தினால் பல நோய்களுக்கு உள்ளாகின்றனர். இதனை சரி செய்ய நமது இயக்கத்தில் ஆற்றுப்படுத்துதலும், அறிவுரையும், ஆன்மீக முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மனநோய் மற்றும் குடிநோயிலிருந்து விடுபட மருந்துகளும் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாதம் சுமார் 52 நோயாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

## *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

அன்னை மரியாளை முதலிடமாக கொண்டு இயங்கி வரும் இவ்வியக்கம் தாய்மார்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக செயல்பட்டு வருகிறது. தாய்மார்கள் திருச்சபையை பற்றியும் ஜெபங்களையும் அறிந்து



கொள்ள "நீங்கள் ஜெபிக்கும் போது" என்னும் புத்தகத்திலிருந்து வினாடி வினா போட்டி whatsapp மூலமாக ஜனவரி 26 இரவு 8.30 மணிமுதல் 8.50 வரை நடைபெற்றது. இதில் 20 கேள்விகள் கொடுக்கப்பட்டு சரியான விடைகளை தேர்ந்தெடுத்து கிளிக்கு செய்து Google FORM வழியாக அனுப்பி வைத்தார்கள். இதில் 15 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஆண்டு விழாவின் போது பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இப்போட்டியில் 160 கலந்து கொண்டனர்.

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மஞ்சாலுமூடு, ஆறுகாணி மற்றும் களியல் மறைவட்டங்களுக்கான பெறுப்பாளருடைய கூட்டம் பிப்ரவரி 6 ம் தேதி மதியம் 2 மணியாளவில் St. Mary's Church களியலில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இயக்குநர் தந்தை அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அந்தந்த மறைவட்டத்திற்கு புதிதாக பெறுப்பாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். பின்னர் ஆண்டுவிழாவை பற்றி கலந்து ஆலேசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 40 பேர் கலந்துகொண்டனர். பின்னர் 4 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.

### திருமண ஆயத்தப் பயிற்சி



திருமண ஆயத்தப் பயிற்சிவகுப்பானது ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் 15 பேர் பங்கேற்று பயன் அடைந்தார்கள். அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது பிப்ரவரி 11 மற்றும் 12 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அருட்தந்தை ஜிம்மி
தெக்கேகடுமத்தில்
இயக்குநர்,
இல்வாழ்வு இயக்கம்




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *கிளைச்சபை வெள்ளிவிழா*

சூசைபுரம் வட்டார சபைக்குட்பட்ட தக்காளிவிளை திருக்குடும்ப ஆண்கள் கிளைசபையின் 25- ம் ஆண்டு வெள்ளி விழா துவக்கத்தை முன்னிட்டு



மாணவர்களுக்கு புத்தாடைகள் வழங்கி சிறப்பிக்கபட்டது. கிளைச் சபையின் மூத்த தலைவர்களுக்கு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சுபின் அவர்கள் புத்தாடைகள் வழங்கினார்கள்.

### *நினைவேந்தல் நிகழ்வு*

மத்திய சபை துணைத்தலைவர் சகோ. சௌந்தர்ராஜ் அவர்களின் நினைவு திருப்பலி மஞ்சாலுமூடு வட்டார சபை சார்பாக 12.12.21 அன்று மதியம் 2.30 மணிக்கு மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலயத்தில் வைத்து ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பின் 3.30 மணியளவில் கிறிஸ்மஸ் விழாவும் கேக் வெட்டும் நிகழ்வும் நடைபெற்றது. வட்டார சபை தலைவர் சகோ.ஜார்ஜ் வின்சென்ட் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து செயல்பட்டார்.

### *கிறிஸ்துமஸ் விழா*

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட தெற்றி விளை கிளைச் சபையில் 23-12-21அன்று மாலை 4 மணி அளவில் அருட்தந்தை. ஜோமி தலைமையில் கிறிஸ்மஸ் விழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. பின் தத்து குடும்பத்திற்கு ரூபாய் 500 வீதம் 5 குடும்பத்திற்கு ரூபாய் 2500 ஆன்மீக ஆலோசர் அவர்களால் வழங்கப்பட்டது.

தக்கலை மத்திய சபை சார்பாக பாசமிகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்களுக்கும் மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட் தந்தை. தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. பாசமிகு ஆயர் அவர்களும், ஆன்மீக ஆலோசகரும் வின்சந்தியர்களை

அன்போடு வரவேற்று கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து ஆசி வழங்கினார்கள்.

புனித அந்தோனியார் ஆலய புனித வின்சென்ட் தே பவுல் கிளைசபையின் கிறிஸ்துமஸ் கொண்டாடட்மானது 25.12.2021 மதியம் 2.30 மணியளவில் ஆலயத்தில் வைத்து நடைபெட்டது. இந்த நிகழ்வில் அருட்தந்தை ரோபின்ஸ் குழிக்கோடில் அவர்கள் தலைமை தாங்கினார். கூடத்தில் மத்தியசபை திட்ட அலுவலர் சகோதரர் ஜாண் குமரிதோழன் மற்றும் நித்திரவிளை வட்டாரசபை தலைவர் சகோதரர் ஜோஸ் அவர்களும் கலந்துகொண்டு கிறிஸ்துமஸ் செய்தியை வழங்கினர்கள். இந்த நிகழ்வில் 17 தத்துகுடும்பங்களுக்கு தலா Rs. 1000 வீதம் Rs. 17000, 5kg அரிசி மற்றும் கிறிஸ்துமஸ் கேக் கும் வழங்கப்பட்டது.

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் இயங்கிவரும் புனித வின்சென்-டி-பால் ஆண்கள், பெண்கள் மற்றும் இளையோர் கிளைச்சபையின் சார்பாக மறைந்த மத்திய துணை தலைவர் சகோ சௌந்தர்ராஜ் அவர்களின் நினைவுத்திருப்பலியும் அ தை த் தொ ட ர் ந் து தத்துக்குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் பொருளுதவியும் ஆன்மீக ஆலோசகர் தலைமையில் நடைப்பெற்றது. சகோ ஷிபு மோன் அவர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருந்தார்.



முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் செயல்பட்டு வரும் பெண்கள் கிளைச்சபையின் சார்பாக 23-12-2021 அன்று காலை கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் தத்து குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது

தகவல் சேகரிப்பு

D. ஷாஜி

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

### *கரோனா மூன்றாம் அலை: இப்போது பிரச்சினை இல்லையா?*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் கொரோனா மூன்றாம் அலையிலிருந்து மக்களை பாதுகாக்க, கொரோனா மூன்றாம் அலை பாதுகாப்பானதா என்ற நிகழ்வு KKSSS அரங்கத்தில் வைத்து ஜனவரி 31 தேதி நடைபெற்றது. இதில் KKSSS இயக்குநர் தந்தை.தோமஸ் பூவத்து மூட்டில் அவர்கள் பேசும் போது இன்றைய சமுதாயத்தில் எல்லோராலும் மிக அதிகமாக பேசப்படும் வார்த்தை கொரோனா. கொரோனா இரண்டாம் அலைகடந்த ஆண்டு மே மாதத்தில் துவங்கி நவம்பர் மாதத்தில் நிறைவு பெற்றது. ஆனால் இந்தாண்டு ஜனவரியில் 3ம் அலை பரவ தொடங்கி உள்ளது. இது அக்டோபர்-நவம்பர் மாதங்களில் மூன்றாம் அலை தீவிரமடையும். முழுமையாக காத்துகொள்ள அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டு முக கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கூறினார்.



இதில் அலுவலகப்பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### Educare

பொங்கல் உழவர் திருநாளான பொங்கல் பண்டிகையை தமிழ்நாட்டில் அனைவரும் கொண்டாடுகின்றனர். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் Educare அலகுகின் சார்பில் அறுவடைத் திருநாளை இறைவனுக்கு பொங்கலிட்டு மாணவர்கள் கொண்டாடினார்கள். இதில் KKSSS இயக்குநர் தந்தை. தோமஸ் பூவத்து மூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது சமூகம் குடும்பம், தனிநபர் ஆகியவை ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்பு உள்ளது. மாணவரின் நடத்தையை குடும்ப பின்னணியோடு சமூக சூழ்நிலையோடு அணுகும் போது தான் அதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் அதற்கு இப்படிப்பட்ட சமூக விழாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன என கூறினார். இந்த நிகழ்வுகளை Educare ஒருங்கினைப்பாளர் அருட்சகோதரி. மெரின் றோஸ் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். இதில் சுமார் 35 மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர் அலுவலக பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### *நிவாரணப் பொருட்கள்*

கன்னியா குமரி சமூக சேவை சங்கம் மற்றும் CTWWC திட்டம் சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 10 பஞ்சாயத்தில் பொருளாதரத்தில் நலிவடைந்த 50 குடும்பத்தினருக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்தினருக்கு தலா 5 கிலோ அரிசி, அனைத்து விதமான பருப்பு வகைகள் குளியல் மற்றும் துணிதுவைக்கும் சோப்பு, 15 நாட்களுக்கு தேவையான மளிகைப்பொருடகள் வீடு மற்றும்



கழிவறை சுத்தப்படுத்தும் மேப் மற்றும் கிருமிநாசினி அடங்கிய தொகுப்புகளுடன் பொருட்கள் வழங்கப்பட்டன. KKSSS இயக்குநர் தந்தை.தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் மேற்பார்வையில் கல்லுவிளை, மஞ்சாலுமூடு, வள்ளவிளை, ஆறுகாணி, மெதுகும்மல் உள்ளிட்ட பல பகுதிகளில் வழங்கப்பட்டது.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

செயலர்

# மறைமாவட்டச் செய்திகள்

## இணைந்துப் பயணிக்கும் திரு அவை, ஆயர் மாமன்ற விவாதக் கூட்டங்கள்

இணைந்துப் பயணிக்கும் திருஅவை என்னும் பெயரில் 2023 ஆம் ஆண்டு உரோமையில் நடைபெறும் ஆயர் பேரவைக்கான



தயாரிப்புப் பயிற்சிகளும் கூட்டங்களும் நமது மறைமாவட்டத்திலும் தொடங்கப்பட்டுள்ளது. உரோமையில் வைத்து, திருத்தந்தை அவர்கள் ஆயர் பேரவையின் அதிகாரபூர்வவமான தொடக்க விழாவை அக்டோபர் 10, 2021 அன்று உரோமையில் நடத்தினார். ஒவ்வொரு மறைமாவட்டமும் அக்டோபர் 17, 2021 அன்று தயாரிப்புகளைத் தொடங்கின.

கூட்டொருங்கியக்க அல்லது இணைந்து பயணிக்கும் திரு அவையைத்தான் கடவுள் இந்த மூவாயிரம் ஆண்டில் எதிர்பார்க்கிறார் என்று திருத்தந்தை அவர்கள் பதிவு செய்துள்ளார்.

இதைப் பற்றிய புரிதலையும் விவாதங்களையும் மேற்கொள்ள தந்தையர்களுக்கான கூட்டம், 2022 ஜனவரி 4, 8 மற்றும் 19 ஆகிய

தேதிகளில் தக்கலை மற்றும் தென்காசி பகுதிகளில் நடத்தப்பட்டது.

### Little Flower Skill பயிற்சி மையம்

பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்களின் ஒத்துழைப்புடன் இந்தியாவின் திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ், மஞ்சாலுமூடு சிறு மலர் ஆலய வளாகத்தில் பெண்களுக்கான திறன் பயிற்சி மையமானது தொடங்கப்பட்டது. இந்த மையத்தின் அதிகாரப்பூர்வ திறப்பு விழா ஜனவரி 5, 2022 அன்று நடைபெற்றது. தையல், எம்பிராய்டரி மற்றும் நர்சிங் ஆகியவற்றில் பயிற்சி பெறுவதற்காக இளைய மற்றும் திருமணமான 80 பெண்கள் இந்த மையத்தில் சேர்ந்தனர். இந்த மையத்தின் இயக்குநராக முக்கூட்டுக்கல்லைச் சேர்ந்த திரு. வில்சன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.



### அருட்தந்தையருக்கான இணைய வழி கூட்டம்

கொரோனா மூன்றாவது அலையின் காரணமாக தமிழக அரசு ஜனவரி 7 2022 அன்று முதல் மாநிலத்தில் ஊரடங்கை அமல்படுத்தியது. வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் மூட உத்தரவிட்டது. மறைமாவட்டத்தில் இறைப்பணி நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கும் அதற்கான மாற்றுத் திட்டங்களைச் ஏற்பாடு செய்வதற்குமாக, ஜனவரி 6, 2022 அன்று இணையம் வழியாக சிறப்பு அருட்தந்தையர் கூட்டம் நடத்தப்பட்டது. ஊரடங்கு காலத்தில் சந்திக்கும் இறைப்பணி சவால்கள் பற்றி பேசப்பட்டது.தொற்றுப் பரவிய வண்ணம் இருந்ததால், சூழலுக்கேற்ப நிகழ்வுகளை ஒருங்கிணைக்க அறிவுறுத்தப்பட்டது. நிறைய பேர்

கூடுகின்ற கூட்டங்களை தவிர்க்க அறிவுறுத்தப்பட்டது.

## மறைவட்ட வாரியான அருட்தந்தையர் கூட்டம்

2022, ஜனவரி 10, 11, 12 ஆகிய தேதிகளில் மூன்று இடங்களில் வைத்து மறைவட்ட வாரியான அருட்தந்தையர் கூட்டம் நடைபெற்றது. மஞ்சலுமூடு-களியல்-ஆறுகாணி மறைவட்டங்கள் முழுக்கோட்டிலும், நித்திரவிளை-படந்தாலுமூடு ஆகியவை நித்திரவிளையிலும், சூசைபுரம்-பிலாங்காலை ஆகியவை பிலாங்கரையிலும் வைத்து கூட்டம் கூடின. சுமார் 32 அருட்தந்தையர்கள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் திருத்தொண்டுப் பணி பற்றிய விவாதம் ஆக்கப்பூர்வமாக நடைபெற்றது.

## Mission Quest – இணையவழி போட்டி

திருத்தொண்டுப் பணியை அறிதல் மற்றும் திருத்தொண்டராக மாறுதல் என்னும் விருது வாக்குடன், சீரோ-மலபார் மிஷன் அலுவலகம் மற்றும் நமது மறைமாவட்ட மறைக்கல்வித் துறை ஆகியவை ஜனவரி 9, 2022 அன்று Mssion Quest 2022 என்ற தலைப்பில் உலக அளவிலான இணைய வினாடி வினா போட்டியை ஏற்பாடு செய்தன. மாதிரி கேள்விகள் தயாரிக்கப்பட்டு அனைத்து மறைமாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் மறைக்கல்வித் துறை கேள்விகளை தமிழில் மொழிபெயர்த்தது. பரிசுப் பட்டியல் ஜனவரி 14, 2022 அன்று ஆயர் கூட்டத்தின் போது அறிவிக்கப்பட்டது. முதியோர் பிரிவில் தக்கலை மறைமாவட்ட படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தை சேர்ந்த திருமதி கீதா அவர்கள் முதலிடம் பெற்றார். மாணவர் பிரிவில் மேழக்கோடு பங்கைச் சேர்ந்த அன்னா எஸ் ராஜ் அவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

பரிசு பெற்றோர் விபரம்

மறைமாவட்ட அளவில் பரிசு பெற்றவர்கள்

### Students Category:

Anna S Raj of St Francis Church, Mezhacode – 1st Prize

Anu K of Christ King Church, Christurajapuram – 2nd prize

Steji J of St James Church, Mankarai – 3rd Prize

Adult Category:

Mr Geetha R of Sacred Heart Church, Padanthalumoodu – 1st prize

Mr Vinu M R of Sacred Heart Church, Padanthalumoodu – 2nd Prize

Anisha S R of Sacred Heart Church, Padanthalumoodu – 3rd Prize

வெற்றிப் பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

- **சீரோ மலபார் ஆயர் பேரவை**

சீரோ-மலபார் திருச்சபையின் 30 ஆவது உயர் பேராய கூட்டம் 2022, ஜனவரி 6 முதல் 15 வரை அன்று காக்கனாடு செயின்ட் தாமஸ் மவுண்டில் தொடங்கியது. திருச்சபையின் தலைவரான மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி தலைமையில் நடைபெற்ற இப்பேரவையில் ஓய்வுபெற்ற ஆயர்கள் உட்பட 57 பேர் கலந்து கொண்டனர். மறைந்த ஆயர் மார் தாமஸ் துரிதிமற்றம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. சீரமைக்கப்பட்ட, சீரான திருப்பலி நடைமுறைப்படுத்தப்படுவதை மதிப்பிடுவதே முக்கிய கருப்பொருளாக இருந்தது. எர்ணாகுளம்-அங்கமாலி மறைமாவட்டத்தை தவிர மற்ற அனைத்து பேராயர்களும் திருப்பலியின் ஆயர் பேரவை முன்வைத்த வடிவத்தை நடைமுறைப்படுத்தினர் என்பது தெரிவிக்கப்பட்டது.

- **புதிய பேராயர் மற்றும் ஆயர்**

சீரோ-மலபார் ஆயர் சபை, திருத்தந்தையின் ஒப்புதலுடன், தலச்சேரி பேராயராக இதுவரை துணை ஆயராக இருந்த ஆயர் ஜோசப் பாம்ப்ளானி அவர்களை பேராயராக உயர்த்தியுள்ளது. மேலும் பாலக்காடு ஆயராக இதுவரை துணை ஆயராக இருந்த பீட்டர் கொச்சுப்புரைக்கல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- **தேனி, சின்னமானூரில் துறவற இல்லம் மந்திரிப்பு**

இடுக்கி மாகாணத்தைச் சார்ந்த FCC சகோதரிகள், 12 ஆகஸ்ட் 2019

அன்று தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூரில் திருத்தொண்டுப் பணியைத் தொடங்கினர். அப்போது காஞ்சிரப்பள்ளி உதவி ஆயர் மார் ஜோஸ் புலிக்கல் முன்னிலையில், வாடகை வீட்டை



தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மந்திரித்தார்கள். தொடர்ந்து சொந்தமாக நிலம் வாங்கப்பட்டு, இல்லம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. அதன் பணிகள் முடிவடைந்த நிலையில் ஜனவரி 22, 2022 அன்று இல்லம் மந்திரிக்கப்பட்டது. இடுக்கி மாகாணத் தலைவி அருட்சகோதரி சுகுணா எஃப்சிசி, இல்லத்தைத் திறந்து வைக்க, காஞ்சிரப்பள்ளி ஆயர் மார் ஜோஸ் புலிக்கல் அவர்களின் முன்னிலையில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் இல்லத்தையும் மந்திரித்தார்.

### தேனியில் அருட்தந்தை இல்லத்திற்கான அடிக்கல்

தேனி மாவட்டத்தில் திருத்தொண்டுப் பணிகளை மேற்கொள்ள காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டதைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். திருத்தொண்டுப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராக அருட்தந்தை பென்னி தட்டாபறம்பில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவரின் முயற்சியால் சின்னமனூரில் எஃப்சிசி கான்வென்ட் அருகே

மறைமாவட்டம் ஒரு நிலத்தை வாங்கியது. ஆயர் மார் ஜோஸ் புலிக்கல் அவர்கள் ஜனவரி 22, 2022 அன்று அருட்தந்தை இல்லத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். குமுளியில் தங்கியவாறு வந்துக் கொண்டிருந்த தந்தை அவர்களுக்கு இவ்வில்லம் பேருதவியாக இருக்கும்.

- **மேய்ப்புப்பணி இயக்குநர்களின் கூட்டம்**:

அனைத்துத் துறைகள் மற்றும் பக்த சங்கங்களின் இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களின் கூட்டம் 24 ஜனவரி, 2022 அன்று இணையம் வழியாக நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துபுபறம்பில் அனைவரையும் வரவேற்றார். துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் சிக்கல்கள் பற்றிப் பகிர்ந்திட இயக்குநர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது. வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயங்கள் மூடப்படுவதால், சாத்தியமான சில நடவடிக்கைகளை இணையங்களில் ஏற்பாடு செய்ய இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அனைத்து துறைகள் மற்றும் பக்த சங்கங்கள் தங்களது ஆண்டறிக்கையை 23 பிப்ரவரி 2022 அன்று குருக்களின் கூட்டத்தில் சமர்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இது துறைகள் மற்றும் பக்த சங்கங்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து மேலும் மேம்படுத்த உதவும்.

- **புனித ஜாண் பாஸ்கோ விழா அனுசரிப்பு**

இளையோரின் தந்தையும் ஆசிரியருமான புனித ஜாண் போஸ்கோ, ஒன்பது வயது நிறைந்த நிலையில், இளையோர் பணிக்கான அழைப்பை ஒரு கனவின் வழியாக தேர்ந்து தெளிந்தார். அது தொடங்கி இளையோருக்காக தன் வாழ்வை சமர்ப்பித்தார். அவரின் திருவிழா ஜனவரி 31, 2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து கொண்டாடப்பட்டது.

## இதர செய்திகள்

- அனைத்து பங்குகளிலும் நள்ளிரவு/அதிகாலை திருப்பலி நிறைவற்றப்பட்டதோடு, 2022 ஆம் புத்தாண்டுக்கு தேவையான ஆசிகளுக்காக வேண்டுதல்கள் ஏறெடுக்கப்பட்டன.

- மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளான திருநெல்வேலி, கயத்தாறு, விருதுநகர் மற்றும் மதுரை ஆகியவற்றில் நடக்கும் பணிகளைப் பற்றிய அறியவும் ஆராயவும் 21 ஜனவரி 2022 அன்று ஆயர் அவர்கள் சென்றிருந்தார்கள்.



- குந்நுவிளை - வளன்நகர் புத்தாலய அரச்சிப்பு பிப்ரவரி 20, 2022 அன்று நடைபெறும்.

- அருட்தந்தை ஜஸ்டின் செருவேலில் அவர்கள் தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வறிக்கையை பிப்ரவரி 25, 2022 அன்று சமர்ப்பித்து, விவாதிக்கிறார்.

- SABS, தக்கலை பிராந்தியம் 6 பிப்ரவரி 2022 அன்று மாகாணமாக உயர்த்தப்படுகிறது.

# மறைவட்டச் செய்திகள்

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

06.01.2022 அன்று தெனகாத் திருநாள் கொண்டாடப்பட்டது. எல்லா பங்கு மக்களும் திருப்பலியில் கலந்து கொண்டு இறைமகன் ஈசோவின் திருமுழுக்கைப் பற்றி தியானித்து திருப்பலியில் கலந்து கொண்டு ஜெபித்து இறையாசீர் பெற்றனர். அருட்தந்தை ஜோஸ் கணிச்சிக்குழி அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள்.

### புனித அந்தோணியார் ஆலயம் – வயலின்கரை

06.01.2022 அன்று தெனகாத் திருநாள் கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு திருப்பலி தெனகா திருநாள் சிந்தனையோடு ஒளியேற்றி எல்லா குடும்பங்களும் பங்கு கொண்டு இறையாசீர் பெற்றனர்.

கொரோனா என்ற கொடிய அரக்கனால் ஆலயங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்ட நிலையில் திருப்பலி மற்ற நாட்களில் நடைபெற்றது. செவ்வாய்கிழமை அந்தோணியார் நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. வியாழக்கிழமை ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. எல்லா ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு Google meet வழியாக திருப்பலி ஒளிபரப்பாக்கப்பட்டது. இதில் சுமார் 30 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நமது பங்கை சார்ந்த அனுஸ்ரீ என்ற மாணவி B.Sc கணினியியல் பாடத்தில் பல்கலை அளவில் 5- ஆம் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அவர்களுக்கு பங்கு சார்பில் பரிசும், பாராட்டும் வழங்கப்பட்டது. மறைக்கல்வி வகுப்புகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்கள் தலைமையில் ஆலயத்தில் நடைப்பெற்றது.

12- ம் தேதி நடைபெற்ற சீரோ மலபார் அகில உலக வினாடி வினா

போட்டியில் பங்கிலிருந்து ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

26 ஆம் தேதி ஆலயத்திலுள்ள அனைத்து மறைக்கல்வி மாணவ மாணவியருக்களுக்கும் இறையழைத்தல் குறித்து வகுப்பு நடத்தப்பட்டது. அப்போது அழைப்பு என்ற மையச் சிந்தனையில் தயாரிக்கப்பட்ட குறும்படம் வெளியிடப்பட்டது. அதில் நடித்தவர்கள் மறைக்கல்வி மாணவர்கள் என்பதில் மிக்க மகிழ்ச்சி.

23- ம் தேதி மாலை 6.30 மணிக்கு 9 ஆம் உறவிய ஆண்டுவிழா திரு. சுகுமார் என்பவர் வீட்டில் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. ஏராளமான பங்கு மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

25 ஆம் தேதி மாலை 5 மணிக்கு மரியாயின்சேனை தலைமையில் 203 மணி ஜெபமாலை (நான்கு மறை உண்மைகள்) ஒப்புக் கொடுக்கப்பட்டது. இது ஆலயத்தைச் சுற்றி பவனியாக நடத்தப்பட்டது. இதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சீரோ மலபார் திருச்சபை ஒற்றுமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## மஞ்சாலுமூடு

### ▶ புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

கொரோனா காலத்திற்கு பின் கல்வி நிலையங்கள் திறந்த நிலையில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் அடங்கிய பைகள் வழங்கப்பட்டன. அது சி.எம்.ஐ திருவனந்தபுரம் மாகாணத்தின் சமூக சேவை குழுவினரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.



6.1.2022 அன்று தெனகா திருநாள் கொண்டாடப்பட்டது. பங்கு தந்தை ஆன்றோ அவர்கள் வாழைத்தண்டில் தீபம் ஏற்றி, ஆடம்பர திருப்பலி நிறைவேற்றினார்கள்.

# சூசைபுரம்

## ▶ சூசைபுரம் மறைவட்ட ஆலயத்தின் வைர விழா நிறைவு (1960–2020):

சூசைபுரம் புனித ஜோசப் திருச்சபையின் இரண்டு ஆண்டுகால வைர விழா கொண்டாட்டங்கள் ஜனவரி 6 2022 அன்று மாலை நிறைவடைந்தது. அன்றைய தினம் தெனகா திருநாள் மற்றும் வைர விழா நிறைவு விழா கொண்டாடப்பட்டது. வளாகம் முழுவதும் அகல் விளக்கு ஏற்றப்பட்டது. ஆயர் அவர்கள் திருப்பலி மற்றும் பொதுக் கூட்டத்திற்கு தலைமை ஏற்றார்.



## ▶ கிறிஸ்து அரசர் ஆலயம்– பாலப்பள்ளம்

புதுவருட திருப்பலி 31.12.2021 அன்று நற்கருணை ஆராதனையோடு தொடங்கியது. அதைத் தொடர்ந்து ஒப்புரவு வழிபாடும், புதுவருட திருப்பலியின் நிறைவாக அனைவருக்கும் இனிப்பும் வழங்கப்பட்டது.

ஜனவரி 6 தெனகாத்திருநாள் அன்று உறவிய வாரியாக அகல் விளக்கு போட்டி நடைபெற்றது. உறவிய அடிப்படையில் மிக அழகாக அகல் விளக்குகள் இயற்றி போட்டியில் கலந்து கொண்டனர். உறவியத்தின் பெயர் கொண்ட புனிதர்களை

முன்னிலைப்படுத்தி ஆட்கள் வேடமணிந்து போட்டியில் கலந்து கொண்டது மிகவும் சிறப்புக்குரியதாகக் காணப்பட்டது. மார்கங்களி நடனம் இளையோர்களின் சார்பில் நடைபெற்றது. அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

*24.01.2022* அன்று மாலை *6* மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கானக் கூட்டம் நடைபெற்றது. Lockdown – இல் மறைக்கல்வி எவ்வாறு நடத்துவது என்பது பற்றியும், விவிலிய வினாடி வினாப் போட்டி நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

*30.01.2022* அன்று காலை மறைக்கல்வி நேரத்தில் விவிலிய வினாடி வினாப் போட்டி நடத்த தீர்மானிக்கப்பட்டது.



**புனித வியாகப்பர் ஆலயம்– மாங்கரை**

*6.2.2022* அன்று தெனகா திருநாளை முன்னிட்டு மாலை 5.45 மணியளவில் அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் ஆடம்பர திருப்பலியும், அதை தொடர்ந்து தூய ஆவி பாடலுடன் ஆலய வளாகத்தில் வாழை தண்டில் அமைந்த அகல் விளக்குகளை பங்குத்தந்தை  கொளுத்த அதன் பின் பங்கு மக்கள் அனைவரும் அகல்களை கொளுத்தினர்.



*9.1.2022* அன்று சீரோ மலபார் சபை சார்பாக நடைபெற்ற வினாடி வினாப் போட்டியில் மறைக்கல்வி பிள்ளைகள், இளையோர்கள், பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

*14.01.2022* அன்று திருப்பலி ஊரடங்கானதினால் துறவியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. திருப்பலிக்கு பின் பங்குத்தந்தை தலைமையில் பொங்கல் வைக்கப்பட்டது. பங்கு மக்கள் பலர் அதில் கலந்து கொண்டனர்.

*17.01.2022* அன்று நடைபெற்ற திருப்பலியில் *10, 11, 12* வகுப்புகளில் படிக்கின்ற மாணவர்களுக்காக சிறப்பாக செபிக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் பங்குத்தந்தை அனைத்து பிள்ளைகளின் தலையில் தனித்தனியாக கை வைத்து ஜெபித்தார்.

*20.01.2022* அன்று பங்குத்தந்தை தலைமையில் திருமுழுக்கு அளிக்கப்பட்டது.

ஊரடங்கு நாட்களில் வியாழன், ஞாயிறு போன்ற நாள்களில் ஆலயத்தில் மறைக்கல்வி நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி ஹெலன்**

## BISHOP'S ENGAGEMENTS FEBRUARY 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | | Bishops House |
| 2 | Wed | | Anniversary of Episcopal Ordination of Mar George Cardinal Allencherry |
| 3 | Thu | | Bishop's House |
| 4 | Frid | | Bishop's House |
| 5 | Sat | 10.00 am | Bishop's House: Meeting of Prayer book committee |
| 6 | Sun | 07.00 am<br>02.30 pm | Padanthalumoodu: Jubilee Holy Qurbana<br>Soosaipuram: Holy Qurbana and Inauguration of SABS Province |
| 7 | Mon | 05.00 pm | Bishop's House: Hymn book committee meeting |
| 8 | Tue | | >>Changanaserry |
| 9 | Wed | 10.00 am<br>04.30 pm | Kayalpuram: Death anniversary of Fr Philip Kodianthara<br>Palai: Betrothal Holy Qurbana |
| 10 | Thu | | Bishop's House |
| 11 | Fri | 09.00 am<br>05.00 pm | Inayam: World Day of the Sick, Holy Qurbana<br>Plankalai: World Day of the Sick, Holy Qurbana |
| 12 | Sat | | Extended territory Mission visit >>Sivagangai |
| 13 | Sun | 10.30 am | Sivagangai: Celebration of the World Day of the Sick |
| 14-18 | Mon | | Meeting with Rev. Fathers |

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 19 | Sat | | Palukal: Golden Jubilee Holy Qurbana for Sr. Stella SH |
| 20 | Sun | 02.00 pm | Kunnuvilai: Consecration of St Joseph Church |
| 21 | Mon | | Meeting with Rev. Fathers |
| 22 | Tue | | Meeting with Rev. Fathers |
| 23 | Wed | 09.30 am | A Sangamam: Priests Ongoing formation program |
| 24 | Thu | | Sangamam: Priests Ongoing formation program |
| 25 | Fri | | Meeting with Rev. Fathers |
| 26 | Sat | | Meeting with Rev. Fathers |
| 27 | Sun | 08.00 am | Kudukachivilai: Holy Qurbana |
| 28 | Mon | 06.00 pm | Pallikonam: Ash Monday Holy Qurbana |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



MCBS Tenkasi Mission, Silver Jubilee, 18.01.2022



TYES, Job Placement, TVS Sundaram Brake Linings,
Kalluvilai, 29.01.2022



Visit, Virudhunagar Mission, 21.01.2022



Mission League, Platinum Jubilee, Kattathurai, 02.01.2022



KKSSS, Pongal Celebration, Kalluvilai 14.01.2022

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570